திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு

தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் வருகை!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

திருச்சி, ஜன. 26 -

திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை வருமாறு-

தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் தலைமையில் 2026 சட்டமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கருத்து கேட்பு கூட்டம் 27.01.2026 தேதி செவ்வாய்கிழமை மாலை: 4.00 மணியளவில் ஜமால் முஹமது கல்லூரி கலையரங்கத்தில் நடைபெறவிருக்கின்றது.

இக்கூட்டத்தில் திருச்சி தெற்கு மாவட்டம் திருவெறும்பூர், திருச்சி கிழக்கு , மணப்பாறை, சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பொதுமக்கள்,சிறு குறு தொழில் முனைவோர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், கல்லூரி மாணவர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், BHEL, OFT, HAPP, பொதுத் துறை நிறுவனங்களின் தொழிற்சங்க பிரதிநிதிகள், பெண்கள் நல அமைப்பு நிர்வாகிகள், வழக்கறிஞர்கள், சமூக நல ஆர்வலர்கள், நகர் நல சங்கத்தினர்கள், நிர்வாகிகள், மாற்றுதிறனாளிகளிகள், திருநங்கை களளின் அமைப்பு நிர்வாகிகள் திருச்சி காந்தி மார்க்கெட் அனைத்து மொத்த மற்றும் சில்லறை வியாபாரி சங்க நிர்வாகிகள் மணப்பாறை சுற்று வட்டார பகுதிகளின் முறுக்கு மொத்த வியாபாரம் செய்யும் கூட்டமைப்பு நிர்வாகிகள் உலகப் புகழ்பெற்ற மணப்பாரை மாட்டுச்சந்தை வியாபார நிர்வாகிகள், பூ உற்பத்தி சங்க நிர்வாகிகள், அனைவரும் வருகை தந்து தங்களது கோரிக்கைமனுக்களை மனுவாவோ, நேரிடையாக தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவிடம் தேரில் வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு :-

மேற்கண்ட சங்கத்தினர் தனி நபர்கள் கோரிக்கைகள் அடங்கிய மனுக்களுடன் நிகழ்விடத்திற்கு அழைத்து வந்து மனுக்களை கொடுக்க வைப்பதற்கான தேவையான உதவிகளை திருச்சி தெற்கு மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர. பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு

ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்கிய முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றி!

தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிக்கை!

சென்னை, ஜன.26-

தமிழ்நாட்டில் பணியாற்றி வரும் அங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர்களுக்கு நம்முடைய நினைவில் வாழும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது சிறப்பு காலமுறை ஊதியம், அகவிலைப்படி மற்றும் ஓய்வுபெறும்போது ஒட்டுமொத்த தொகை என வழங்கி வரலாறு படைக்கப்பட்டது.

ஒன்றிய அரசு நாடு முழுவதும் உள்ள அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர் களை பகுதி நேர பணியாளர்கள் அல்லது விருப்பத்தின் அடிப்படையில் தன்னார்வலர்களாக பணியாற்றி வருவதாகக் கூறி தொழிலாளர்கள் என அவர்களை அங்கீகரிக்க இன்றளவும் மறுத்து வருகிறது. இதனை தொடர்ந்து தொ.மு.ச. பேரவை சார்பாக நாடாளுமன்றத்திலும் வலியுறுத்தியபோதும் உரிய பதில் எதும் ஒன்றிய அமைச்சரால் வழங்கப்படவில்லை.

மாண்பமை உச்ச நீதிமன்றம், குஜராத் உயர் நீதிமன்றம் போன்றவைகள் இவர்களை தொழிலாளர்களாக அங்கீகரித்து காலமுறை ஊதியம், பணிக்கொடை உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பு வழங்கத் தீர்ப்பளித்த பின்னரும் ஒன்றிய அரசு எந்தவித சலுகைகளையும் வழங்க மறுத்து வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 2021 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவிடம் தொ.மு.ச. பேரவை கழகத் தலைவரின் ஒப்புதலுடன் வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று தேர்தல் வாக்குறுதியாக கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் மற்றும் சமூக நலத்துறை மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களும் துறை செயலாளர் இயக்குநர்கள் அடங்கிய குழு 22.1.2026 அன்று தொழிற் சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தியபோது நாம் முன் வைத்த கோரிக்கைகளான, அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் வாழ்வில் ஒளியேற்றத்தக்க வகையில் சமூகப்பாதுகாப்புத் திட்டமான தற்போது வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியம் ரூ.2000த்தை உயர்த்தி வழங்க வேண்டும் எனவும், ஓய்வு பெறும்போது வழங்கப்பட்டு வரும் ஒட்டுமொத்தத் தொகையான ரூபாய் ஒரு லட்சத்தை உயர்த்தி வழங்குவதற்கு முன் வர வேண்டும் எனவும், ஓய்வு பெற்று போதுமான ஓய்வூதியம் இல்லாத நிலையில், அப்பணியாளர்கள் இறந்து போனால் அவர் தம் குடும்பம் நிர்க்கதியாக நிற்கிறது. அந்தக் குடும்ப வாரிசுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்க வேண்டுமெனவும், ஓய்வு பெற்ற பிறகு இறந்த பணியாளருக்கு கௌரவமான ஈமக்கிரியை செய்வதற்குக் கூட வழியில்லாத நிலை இருப்பதை சுட்டிக்காட்டி அரசு ஈமக்கிரியை நிதியை வழங்குவதற்கு முன் வர வேண்டுமென வலியுறுத்தினோம்.

ஒன்றிய அரசாங்கம் அங்கன்வாடி திட்டத்திற்கு வழங்க வேண்டிய நிதியை முழுமையாக வழங்காமலும், இத்திட்டத்தை சீர்குலைக்கும் வகையிலும் புதிய கட்டுப்பாடுகளை விதித்து நிதி வழங்குவதை மறத்து வரும் நிலையில் மாநில அரசின் நிதியில் இருந்து எதுவும் தராத நிலையிலும் மேற்படி கோரிக்கையினை தாயுள்ளத்தோடு பரிசீலித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் 24.01.2026அன்று சட்டமன்றத்தில் அங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மாதாந்திர சிறப்பு ஓய்வூதியம் ரூபாய் 2000ம் என்பதை ரூபாய் 3400 ஆக உயர்த்தியும், மினி பணியாளர்களுக்கு ரூபாய் 3200 என உயர்த்தியும் உதவியாளர்களுக்கு ரூபாய் 3000 ஓய்வூதியம் வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

தற்போது ஓய்வுபெறும் போது வழங்கப்படும் ஒட்டுமொத்தத் தொகையான ரூபாய் 1 லட்சத்தை ரூபாய் 2 லட்சமாக உயர்த்தி வழங்கவும், இதுவரையில் இல்லாத அளவிற்கு அங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்த நிலையில், அவர்களின் குடும்பம் பாதுகாப்பாக வாழ்வதற்கு ஏதுவாக பெற்று வந்த ஓய்வூதியத்தில் 60 சதவிகிதம் குடும்ப ஓய்வூதியமாக வழங்குவதற்கும் ஓய்வூதியர் இறந்தால் அவரின் இறுதி சடங்கிற்கு ரூபாய் 20,000 வழங்கிடவும் ஆணையிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தொ.மு.ச. பேரவை சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் மேற்கு பகுதி திமுக இளைஞர் அணி சார்பில், சமத்துவ பொங்கல் விழாவை முன்னிட்டு இராயபுரம் செயிண்ட் பீட்டர்ஸ் மைதானத்தில், இளைஞர்களுக்கான மாபெரும் கால் பந்தாட்டப் போட்டி 11.01.2026 அன்று பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் அ. சாந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., ஐ.ஏ.ஸ் இரா. மூர்த்தி எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினசர் எம்.எல்.ஏ. ஆகியோர் பரிசுகளை வழங்கினர். இதில் கழக இளைஞரணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கவிவேந்தர் கா.வேழவேந்தன்

ஜனவரி 26 (2022)

கல்வி கற்கும் பருவத்திலேயே மிகச் சிறந்த கவிஞராகவும், தலைசிறந்த எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் விளங்கியவர்.

இவரது 'வேழவேந்தன் கவிதைகள்' என்ற நூலினை பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்டு, அவரது பாராட்டை பெற்றவர்.

"கவிவேந்தர் கா.வேழவேந்தன் என் உடன்பிறப்புக்களில் ஒருவர் என்கிறபோது உவகை உதடுகளில் மட்டும் பூத்திடவில்லை என் உள்ளத்திலும் கூடப் பூத்துக் குலுங்குகிறது" என கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

பத்தாண்டுகள் கும்மிடிபூண்டி தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக இருந்ததோடு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அமைச்சரவையில் தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருந்தவர்.

இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

இந்திய அரசமைப்புக்கு

தி.மு.க.வின் பங்களிப்பு தொடர்கிறது...

In fact, if I were to be very dedicated to the Constitution, I would plead for amendments to the Constitution wherever I find that an amendment is needed.

Perarignar Anna in Rajya Sabha, March 4th1965.

அரசமைப்பு என்பது ஆவணமல்ல. அது வளரும் தத்துவம். விவாதங்களின் வழியே அது மென்மேலும் செழுமை பெற வேண்டும். இந்திய அரசமைப்பு, அவையில் விவாதிக்கப்பட்டு இறுதிவடிவத்தை எட்டிக்கொண்டிருந்த வேளையில்தான் திராவிட முன்னேற்றக்கழகம்உதயமானது. சுதந்திர இந்தியாவின் அரசமைப்பு அனை வருக்கும் வாக்குரிமையை அளித்தாலும், மக்கள் அனைவரும் வாக்களித்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக்கொண்டு இந்திய அரசமைப்பு வரையப்படவில்லை. அரசமைப்பு உருவானதன் இந்தப் பின்னணியைச் சுட்டிக்காட்டுகிற அதே சமயத்தில், உலகெங்கும் உருவாகி வளர்ந்துவந்த அரசமைப்பு நெறிகளை இந்திய அரசமைப்பு தக்கவைத்துக்கொள்ள விழைந்ததை ஏற்றுக்கொள்ளவும் அந்நெறிகள் தொடர்ந்து பாதுகாக்கப்படவும் தி.மு.க. குரல்கொடுத்துவருகிறது. அரசமைப்பின் விழுமியங்கள் பாதுகாக்கப்படவும், இந்திய அரசமைப்பின் குற்றங்குறைகள் சரிசெய்யப்படவும் ஒருசேர ஒரு விவாதத்தை இடைவிடாது தி.மு.க. நடத்திவருகிறது.

அலுவல்மொழி குறித்த அரசமைப்பின் 17வது பகுதியை தி.மு.க. அளவுக்குத் தொடர்ந்து கேள்விக்குட்படுத்திக்கொண்டிருக்கும் அரசியல் கட்சி இந்திய அளவில் தி.மு.க.வைத் தவிர வேறெதும் இல்லை. அலுவல்மொழி குறித்த எந்தவொரு அரசமைப்பு விவாதமும் பேரறிஞர் அண்ணாவின் மாநிலங்களவை உரையைத் தவிர்த்துவிட்டு முழுமைபெற முடியாது. மார்ச் 04, 1965 அன்று மாநிலங்களவையில் அவர் ஆற்றிய ஆங்கில உரை இன்று நாடாளுமன்ற மின் நூலகங்களின் வழியே வாசிக்கக் கிடைக்கிறது. ஆனால், அவர் ஆற்றிய உரையின் தமிழின் வடிவம் தி.மு.க.வால் உடனடியாக மொழிபெயர்க்கப்பட்டு பல்லாயிரக் கணக்கானவர்களைச் சென்றடைந்தது. இந்திய அரசமைப்பு விவாதங்களே இணையத்தின் வருகைக்குப் பிறகுதான் எல்லோருக்கும் வாசிக்கக் கிடைக்கிறது. அதற்கு முன்பு, அவ்விவாதங்களின் பெருந்தொகுப்புகள் பெரும்பாலும் வழக்கறிஞர்களால் மட்டுமே வாசிக்கப்பட்டு வந்தன. இன்றளவும் தொடர் சிக்கலை விளைவித்துக் கொண்டிருக்கும் அலுவல்மொழி குறித்த 17வது பகுதியை என். கோபாலசாமி அய்யங்கார் அரசமைப்பு அவையில் விவாதத்திற்கு முன்வைத்தபோது அவரது ஒலிவாங்கி அவை உறுப்பினர்களுக்குச் சரியாகக் கேட்கவில்லை என்பது போன்ற அதிர்ச்சித் தகவல்களும் அந்த பெருந்தொகுப்பில் உண்டு. இதையெல்லாம் கவனத்தில் கொண்டால் அரசமைப்பு சார்ந்த விவாதங்களை கடைக்கோடி குடிமக்களுக்கும் கொண்டுசேர்க்கும் பணியை தி.மு.க. எவ்வளவு முன்னின்று மேற்கொண்டது என்பதை உணர முடியும்.

செ.இளவேனில்

அலுவல்மொழிச் சிக்கலைப் போலவே ஒன்றிய மாநில அரசுகளின் உறவுகளைக் குறித்த ராஜமன்னார் குழுவின் அறிக்கை மீதான சட்டமன்றப் பேரவை, மேலவை விவாதங்களையும் தி.மு.க. தலைமையிலான அரசு அதிகாரப்பூர்வமாக வெளியிட்டது. அந்த அறிக்கையைக் குறித்து சட்டமன்றப் பேரவையில் ஐந்து நாட்களும் மேலவையில் நான்கு நாட்களும் தொடர்ந்து விவாதங்கள் நடந்தன. அந்த விவாதங்களுக்கு விடையளித்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரைகளும் செய்தி மற்றும் மக்கள்தொடர்புத் துறையால் சிறுவெளியீடுகளாக வெளியிட்டன. தி.மு.க.வும் அந்த உரையை பல்லாயிரக் கணக்கானவர்களிடம் கொண்டு சேர்த்தது. அரசமைப்பு சார்ந்த விவாதங்களை அரசமைப்பு அவையில் விவாதித்த ஆறாயிரத்து சொச்சம் பக்கங்களுக்குள் அடக்கிவிட முடியாது. நாடாளுமன்ற அவைகளிலும் சட்டமன்ற அவைகளிலும் தி.மு.க. உறுப்பினர்கள் மேற்கொண்ட விவாதங்களையும் சேர்த்தால்தான் மாநில அரசுகளின் பார்வைகள் தெளிவுறும்.

அரசமைப்புச் சட்டத்தை எரிக்க முயன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கடுங்காவல் அனுபவித்தார் அண்ணா. அதை எரித்ததற்காக சிறைத்தண்டனை அனுபவித்தார்கள் தி.மு.க. தலைவர்கள். மொழித் திணிப்புக்கு எதிராக மாணவர்களின் புரட்சி வலுப்பெற்ற வேளையில், அதை எதிர்கொள்ளத் தயங்கிய அன்றைய பிரதம அமைச்சர் சாஸ்திரி தி.மு.க. அரசமைப்பை அவமதிக்கிறது என்ற குற்றஞ்சாட்டி திசைதிருப்ப முயன்றார் (தினத்தந்தி, 28.01.65). இத்தகைய பழிச்சாட்டல்களுக்கு நடுவில்தான், கட்டுக்கடங்காத மக்களின் உணர்வெழுச்சியாய் போராட்டங்களை முன்னின்று நடத்தியது தி.மு.க. இன்னொரு பக்கம் மக்கள் பிரதிநிதிகளின் அவைகளில் அறிவுபூர்வமான ஒரு தொடர் விவாதத்தையும் தொடர்ந்து நடத்திவருகிறது.

ஒன்றிய, மாநில உறவுகளைப் பற்றிய விவாதத்தில் ராஜமன்னார் குழுவின் அறிக்கையும் அதை முன்வைத்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலும் மேலவையிலும் நடந்த விவாதங்களும் என்னென்றைக்குமான ஆய்வுப்பொருட்கள். இந்திய அரசமைப்பு இயற்றப்பட்ட போது நிகழ்ந்த விவாதங்கள் கனவுகளின் மீதும் நம்பிக்கையின் மீதும் மாநிலங்களைக் குறித்த அச்சங்களின்மீதும்தான் உருவானவை. ஆனால், மாநில சுயாட்சி குறித்த 'மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி' என்ற முழக்கத்தை முன்வைத்த முத்தமிழறிஞரின் சட்டமன்ற உரைகளோ அதுவரையிலுமான ஆட்சி நிர்வாக அனுபவத்தின் மீது எழுந்துநிற்பவை. மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட அதிகாரத்திற்குள் உணவு உற்பத்தி, கல்வி, வீட்டுவசதி, குடிநீர் மற்றும் வடிகால் வசதிகள் ஆகியவற்றைத் திறம்பட செய்ய முடிந்திருக்கிறது என்ற சாதனைப் பட்டியலின் துணையோடுதான் மாநிலங்களுக்கான அதிகாரத்தைக் கோரினார் கலைஞர். அரசமைப்பு அவை விவாதங்களில் ஒருகைமட்டுமேஓங்கியிருந்தது. நினைத்ததையெல்லாம் நிறைவேற்றிக் கொள்ளும் வாய்ப்பு அன்று ஒன்றியத்தை ஆண்ட கட்சிக்கு இருந்தது. ஆனால், மாநில சுயாட்சித் தீர்மானத்தைக் கலைஞர் முன்மொழிந்தபோது அப்போது முகிழ்த்திருந்த புதிய கட்சியொன்றின் சகோதரத் தாக்குதல்களையும் தாங்கியபடியேதான் அதைச் செய்துமுடிக்க வேண்டியிருந்தது இன்றும் அந்நிலை தொடரத்தான் செய்கிறது.

பெரும்பாலும் தமிழிலேயே நடந்த இந்த விவாதங்களின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கான அவசியமும் இருக்கிறது. ஏனெனில் அண்ணாவின் நாடாளுமன்ற, சட்டமன்ற உரைகளும் சரி கலைஞரின் உரைகளும் சரி தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் மட்டுமானதன்று. இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மொழியினருக்குமானது, ஒவ்வொரு மாநிலத்திற்குமானது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு, நீதிக் கட்சி காலம் தொடங்கி தற்போது வரையிலும் நடந்த சட்டமன்ற விவாதங்களை அனைவருக்கும் கிடைக்கும் வகையில் தனி இணையதளத்தையே உருவாக்கி நடத்தி வருகிறது. எனவே, இதுவரையிலுமான விவாதங்களைத் தொகுப்பது இப்போது எளிதாகிவிட்டது. அண்ணா, கலைஞர் வழியில் முரசொலி மாறன், கு.ச.ஆனந்தன், எஸ்.ஜே.சாதிக் பாட்ஷா, எல்.கணேசன், ஆலடி அருணா என்று திராவிட இயக்கத் தலைவர்கள் இந்திய அரசமைப்பைப் பகுப்பாய்வு செய்து எழுதிய நூல்களைப் பக்கக் கணக்கில் கொண்டால், பல்லாயிரக் கணக்கானவை. அவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பதிப்பின் ஆங்கில மொழிபெயர்ப்பொன்றும் தேவை.

மொழியுரிமை, நிதி உள்ளிட்ட முக்கிய அதிகாரங்களுக்கான மாநில சுயாட்சி என்பதோடு மட்டும் தி.மு.க.வின் அரசமைப்புபார்வை சுருங்கிவிடவில்லை. அரசமைப்பின் பல்வேறு நுட்பமான கூறுகளையும் அது சட்டமியற்றும் அவையில் விவாதித்துள்ளது. ஓர் உதாரணத்திற்கு, சட்டமியற்றும் அவை, நிர்வாகத் தலைமையான ஆளுநர், நீதித்துறைக்கு இடையிலான அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு குறித்த முக்கியமானதொரு அவதானிப்பு கலைஞரின் சட்டமன்ற உரையிலிருந்து...

" ... இந்த மன்றத்தில் உருவாக்குகிற சட்டம் அத்தனையும் செல்லுபடியாகும் சட்டம் என்றோ, மக்களால் ஏற்றுக்கொள்ளத்தக்கச் சட்டம் என்றோ கூறிவிட முடியாது. உருவாக்குகிற சட்டங்களில் கையொப்பம் இடுகிற பொறுப்பு, தற்காலிக கவர்னராக இருக்கக்கூடிய மாநில தலைமை நீதிபதி அவர்களுக்கு உரிய ஒன்றாக இருக்கிறது. இந்த முறையில் தானே கையொப்பமிட்டுச் சட்டமாகும்போது குடிமகன் ஒருவனுக்கு அதிருப்தி அளிப்பதாக இருக்கிற காரணத்தினால், தற்காலிக கவர்னர் தலைமை நீதிபதியாக நீதிமன்றத்தில் அமர்ந்திருக்கிற நேரத்தில், அந்தச் சட்டத்தைச் செல்லுபடியாகாமல் ஆக்க வேண்டுமென்ற அடிப்படையில் முறையிட்டுக் கொள்ளப்பட்டு வருகிற நேரத்தில், அதற்கான தீர்ப்பைச் சொல்லுகிற தர்ம சங்கடமான நிலைமை ஏற்படுகிறது என்று சொல்லாமல் இருக்க முடியாது." (03.02.1966, கலைஞரின் சட்டமன்ற உரைகள்: ஆளுநர் உரை மீது)

தற்காலிக ஆளுநராக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியை பொறுப்பேற்கச் செய்யும் அரசமைப்புக் கூறு குறித்த கலைஞரின் கேள்வி, குடியரசுத்தலைவராக உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியைப் பொறுப்பேற்க வகைசெய்யும்அரசமைப்புக்கூறுக்கும்பொருத்தமானதே.

ஆளுநர் தொடர்பில் தி.மு.க. தொடர்ந்து நிகழ்த்திவரும் அரசமைப்பு விவாதம் இந்த ஆண்டிலும் சிறப்பான தொடக்கத்தைக் கொண்டிருக்கிறது. மாநிலத்தின் நிர்வாகத் தலைவர் என்ற நிலையில் சட்டமியற்றும் அவைகளில் ஒவ்வோராண்டும் முதல் கூட்டமாக அமையும் ஆளுநர் உரை என்ற காலனியாதிக்க நடைமுறை இன்றும் சம்பிரதாயச் சடங்காகத் தொடர்வதையும் மக்களாட்சிக் கோட்பாடுகளுக்கு எதிரான அந்நிகழ்வு தொடர வேண்டுமா என்ற கேள்வியையும் எழுப்பியிருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர்.

இந்திய அரசமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பவள விழாவை இந்தியா முழுவதும் கொண்டாடி முடித்திருக்கும் வேளையில், ஒன்றியமாநில உறவுகள் குறித்த உயர்மட்டக் குழுவை நிறுவி, அரசமைப்பு குறித்து தனது அறிவுசார் விவாதத்தைத் தொடர்ந்து நிகழ்த்தியபடியே இருக்கிறது தி.மு.க. ராஜமன்னார் குழுவின் அறிக்கைக்குப் பின்னர் அரசமைப்பில் கொண்டுவரப்பட்டிருக்கும் திருத்தங்களில் இந்த உயர்மட்டக் குழு சிறப்புக்கவனம் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை குழு வெளியிட்டிருக்கும் வினாப்பட்டியல் எடுத்துக்காட்டுகிறது. குறிப்பாக, சரக்கு மற்றும் சேவை வரியின் அறிமுகம் ஒன்றிய, மாநில அரசுகளுக்கு இடையிலான நிதிப் பகிர்வில் ஏற்படுத்தியிருக்கும் சிக்கல்கள், 73வது மற்றும் 74வது அரசமைப்புத் திருத்தங்களின் வாயிலாக உள்ளாட்சி நிர்வாகத்தில் கொண்டுவரப்பட்டிருக்கும் மாற்றங்கள், கல்வி பொதுப் பட்டியலுக்கு மாறிய பின் ஒன்றிய அரசு உயர் கல்வியில் செலுத்திவரும் மேலாதிக்கம் ஆகியவற்றை இந்த உயர்மட்டக் குழு விவாதத்திற்கு எடுத்துக் கொண்டுள்ளதை உணர முடிகிறது.

தி.மு.க.வின் இந்த இடைவிடாத அரசமைப்பு விவாதத்திற்கு என்ன பயன்? மாநில சுயாட்சித் தீர்மானம் மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையில் அதற்கு விடை இருக்கிறது:

"...உடனடியாக நாளைக்கே மத்திய அரசு அதை நடைமுறைக்குக் கொண்டுவந்து, மாநில சுயாட்சியைத் தந்துவிடும் என்கின்ற அந்த அவசரமான நம்பிக்கையோடு இந்தத் தீர்மானத்தை இங்கே நான் கொண்டுவரவில்லை. இந்தியாவிலே தோன்ற இருக்கின்ற ஜனநாயகப் புரட்சியினுடைய தோற்றுவாயாக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிற நாளாக இருக்கும் என்ற கருத்தின் அடிப்படையிலேதான் அந்தத் தீர்மானத்தை இங்கே ஆளும் கட்சியின் சார்பாக இந்தப் பேரவையின் முன் வைத்திருக்கிறோம்"

(ஏப்ரல் 20, 1974 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் முதலமைச்சர் கலைஞர்)

ஜனவரி 26: இந்திய அரசமைப்பு நடைமுறைக்கு வந்த நாள்.